# <u>பெரியகுளம் நகராட்சி</u>

## <u>திடக்கழிவு மேலாண்மை திட்டம்</u>

பெரியகுளம் நகராட்சி 2.11 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் அமைநைந்துள்ள இரண்டாம் நிலை நகராட்சியாகும். 2011ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள்தொகை 42976 தற்போதைய மக்கள் தொகை 45114 ஆகும். மேலும் சராசரியாக நாள்தோறும் சுமார் 2000 வெளியூர் மக்கள் வந்து செல்கின்றனர். இந்நகராட்சியில் 11471 குடியிருப்புகளும் 1241 வணிக நிறுவனங்கள் மற்றும் 37 கல்வி நிறுவனங்கள் 12 வழிபாட்டு தளங்கள், இரண்டு சந்தைகள் உள்ளது. நாள்தோறும் மேற்கண்ட இடங்களில் இருந்து 16 மெட்ரிக்டன் குப்பை சேகரமாகிறது.

- இந்நகராட்சிப்பகுதிகளில் மொத்தம் உள்ள 30 வார்டுகளில் முதல்நிலை குப்பை சேகரம் செய்ய 19 பேட்டரியால் இயங்க கூடிய வாகனங்கள் மற்றும் 5 இலகு ரக வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு 100 % மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து சேகரிக்கப்படுகிறது.
- சேகரிக்கும் மக்கும் குப்பைகள் உரக்கிடங்கில் பாத்தி அமைத்தல் முறையிலும் (windrows method) மண்புழு உரக்குடில் மூலம் மண்புழு உரம் தயார் செய்தும் செயலாக்கம் செய்யப்பட்டு வருகிறது.
- மக்காத குப்பைகள் வளமீப்பு மையத்தில் (RRC) தூய்மை பணியாளர்களால் சேகரம் செய்யப்படும் விற்பனை செய்யக்கூடிய உலர் கழிவுகள் அவர்கள் மூலமாகவே உள்ளூர் விற்பனை மையங்களில் விற்பனை செய்யப்பட்டும், விற்பனை செய்ய இயலாத பிளாஸ்டிக் கழிவுகளை சேகரம் செய்து அப்புறப்படுத்துவதற்கு அல்ட்ரா சிமெண்ட் பேக்டரி, அரியலூர் மற்றும் பேப்பர்மேன் என்விரோன்மெண்ட் சொலூசன் பிரைவேட் லிமிடெட், சென்னை ஆகிய நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தி செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- இந்நகராட்சி உரக்கிடங்கில் தயாரிக்கப்படும் மண்புழு உரம் விவசாயிகள் நலன்கருதி குறைந்தபட்ச விற்பனை விலை ரூ.3/–க்கும், பாத்தி அமைத்தல் முறை மூலம் தயாரிக்கப்படும் உரங்கள் உழவர் அடையாள அட்டை வைத்துள்ள விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.